பாரதிய ஜனதா கட்சி
மத்திய அலுவலகம்
11, அஷோகா சாலை, புதுதில்லி 01
தொலைபேசி: 011 23005700, தொலை நகல்: 011 23005787

<u>ரயில்வே பட்ஜெட் 2013 2014 குறித்து பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங்கின் அறிக்கை</u>

பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்குமுன்பே பயணிகள் கட்டணம் உயர்த்தப்பட்ட நிலையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் 2013 2014 ஆண்டுக்கான ரயில்வே பட்ஜெட் என்பது வெறும் கண்துடைப்பு. சரக்குக் கட்டணத்தில் எரிபொருளின் அடிப்படையில் கட்டணம் விதிப்பது என்னும் முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதனால் சரக்குக் கட்டணம் 5 % உயரும். சரக்குக் கட்டணத்தில் ஏற்படும் உயர்வு ஒட்டுமொத்த விலைவாசியையும் பாதிக்கவே செய்யும்.

தத்கல் முன்பதிவுக்கான கட்டணத்தையும் அதி விரைவு ரயில்களுக்கான கட்டணங்களையும் உயர்த்துவதற்கான யோசனையும் பட்ஜெட்டில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த உயர்வு பயணிகள் கட்டணத்தில் சரிசெய்துகொள்ளப்படும். ஆளும் கூட்டணி இலக்கற்றுச் செயல்படுவதும் அதன் பொருளாதார நிர்வாகச் சொதப்பல்களும் ரயில்வே பட்ஜெட்டைப் பாதித்துள்ளது.

புதிய ரயில் பாதைகள் உருவாக்குவது கணிசமாக்க் குறைந்துள்ளது (400 கிமீ தொலைவுக்கு மட்டுமே புதிய பாதைகள் திட்டமிடப்படுகின்றன). ரயில் கட்டமைப்பை வளர்ப்பதில் ஆளும் கூட்டணிக்குத் தொலைநோக்குப் பார்வை இல்லாத்தையே இது காட்டுகிறது. உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதில் ஆக்கபூர்வமான அணுகுமுறை இல்லாததால் ரயில்வே நஷ்டத்தைச் சந்தித்துவருகிறது.

உள்கட்டமைப்பு மற்றும் பயணிகளுக்கான வசதிகளில் மேம்பாட்டுக்கான எந்த அறிகுறியும் இல்லாமல் ரயில்வே அமைச்சகம் பற்றாக்குறை பட்ஜெட்டைத் தாக்கல் செய்துள்ளது (நஷ்ட மதிப்பீடு ரூ. 24,600). ரயில்வேயின் வளர்ந்துவரும் நஷ்டத்தின் சுமை சாமானிய மனிதன் மீது சுமத்தப்பட்டுள்ளது. ஐ.மு.கீ.வின் திறமையின்மை, தொலைநோக்கின்மை ஆகியவற்றை ரயில்வே பட்ஜெட் அம்பலப்படுத்தியுள்ளது.

(ஓ.பி. கோஹ்லி)
தலைமையகப் பொறுப்பாளர்